**S.T.C. No.94/2022**

**Dated: 10.01.2023**

**P W: 1**

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**Name:** தங்கப்பாண்டியன் த/பெ ராஜதுரை

எதிரி **தரப்பில் குறுக்கு விசாரணை :**

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது. எனக்கு சொந்த ஊர் கோவில்பட்டி. எனக்கு திருநெல்வேலி தச்சநல்லூரில் உறவினர்கள் யாரும் இல்லை. வியாபாரிகள் நிறைய நபர்களை தச்சநல்லூரில் தெரியும். பழைய நான்கு சக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு மாதவருமானம் சுமாராக ரூ.1,50,000/- வரை கிடைக்கும். வாகனங்களு்க்கு பைனான்ஸ் செய்து வரும் தொழில் நான் செய்து வரவில்லை. ரூ.5,00,000/- எனக்கு பெரிய தொகை என்றால் இல்லை. நான் பான்கார்டு வைத்துள்ளேன். வருமானவரி தாக்கல் செய்து வருகிறேன். பழைய வாகனம் வாங்கி விற்பது குறித்து விபரங்களை பதிவு செய்வதும் வியாபாரம் விசயங்களை பதிவு செய்வதற்கும் பதிவேடுகன் பராமரிக்கப்படுகிறது. கடனாக பணம் யாருக்கேனும் கொடுப்பதற்காக பதிவேடு ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வரவு செலவு குறித்து வியாபாரம் வைத்துக்கொள்ளுவதற்கு பதிவேடு ஏதேனும் உள்ளதா என்றால் வியாபாரம் தொடர்பான விசயத்திற்கு பதிவேடு உள்ளது மற்ற வரவு செலவு விபரம் குறித்து பதிவேடு இல்லை.

வழக்கு கடன் தொகை ரூ.5,00,000/- த்திற்கு வங்கியிலிருந்து எடுத்துக்கொடுக்கப்ட்டதா என்றால் என் கைவசம் இருந்த பணம் தான் அது, அதற்கான கணக்கு எதுவும் என்னிடம் இல்லை. கடன் கொடுத்த தேதியன்று ரூ.5,00,000/- என்பதை காட்டக்கூடிய ஆவணம் என்னிடம் இல்லை. பு.சா.ஆ.3 எதிரிக்கு 15.07.2022 தேதியன்று அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பானது என்னால் தான் எனது வழக்கறிஞருக்கு எடுத்துகூறப்பட்டுள்ளது அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 15.07.2022 தேதியிட்ட எனது வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் என்றால்

சரிதான். அந்த ஆவணம் **எ.சா.ஆ.1** ஆகும். அதனை பெற்றவுடன் எதிரி 20.07.2022 தேதியிட்டு அதற்கு இடைக்கால பதில் அறிவிப்பு பதிவு தபால் அனுப்பினார். அதனை நான் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகைஅட்டை மற்றும் அந்த அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டதற்கான அஞுசலக ரசீது மற்றும் அந்த அறிவிப்பின் அலுவலக நகல் **எ.சா.ஆ.2** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.எ.சா.ஆ.1 அறிவிப்பில் 26.12.2020 தேதியன்று ரூ,5,00,000/− கைமாற்றுகடனை எதிரி பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு எதிரியிடம் அந்த பணத்தினை 19.06.2021 தேதியன்று திருப்பிக்கேட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு 22.06.2022 தேதியன்று வழக்கு காசோலையினை எதிரி என்னிடம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதனை பெற்றுக்கொண்டபின்பு எதிரி பு.சா.ஆ. 5 அறவிப்பினை இடைக்கால அறிவிப்பாக வழக்கறிஞர் மூலமாக எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். பு.சா.ஆ.5 ல் என்னுடைய அறிவிப்பிலுள்ள சங்கதிகள் ஒவ்வொரு பத்தியாகவும் மொத்தமாகவும் மறுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 4 வதுபத்தியில் எதிரி என்னை யாரென்று தெரியாது என்றும் வழக்குகாசோலை எவ்வாறு எனக்கு கிடைத்தது என்றும் அதிலுள்ளது என்றால் 3 நாட்களுக்குள் பதில் அறிவிப்பு கொடுக்குமாறும் உள்ளது என்றாலும் சரிதான். அதனை பெற்றுக்கொண்டு இதுநாள் வரையிலும் அதற்கான பதில் அறிவிப்பினை தரவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் அவ்வாறு பதில் அறிவிப்பு அனுப்ப தவறினால்காவல் துறையில் புகார் தெரிவிப்பதாக எதிரி கூறியிருந்தார் என்றால் சரிதான்.

திருநெல்வேலி மாவட்டசந்திப்பு குற்றப்பிரிவிலிருந்து என்னுடைய வழக்கறிஞருக்கு கைப்பேசி மூலமாக தொடர்பு கொண்டு அதில் என்னை ஒரு தரப்பினராக அலைபேசியில் அழைப்பில் சேர்ந்துக்கொண்டு விசாரணை க்கு ஆஜராகமாறு தெரிவித்தார்கள் என்றாலும் காவல்ஆய்வாளரிடம் நான்

நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என் மீது தொலைந்துபோன காசோலையை இவ்வழக்கின் புகார்தாரர் பொய்யான முறையில் தாக்கல் செய்து என்னிடம் பணம் பறிப்பதற்காக அவ்வாறு செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம்,அதிலுள்ள அஞ்சல் ஒப்புகை அட்டைகள் மற்றும் அஞ்சல் ரசீதுகள் எ.சா.ஆ.3 வரிசைகள் ஆகும். பு.சா.ஆ.3 ல் எதிரி எனது நண்பர் என்றுகுறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி நண்பர் இல்லை வியாபாரம் மூலமாக எனக்கு பழக்கம் .

பு.சா.ஆ.3 ல் எதிரி எனக்கு வியாபாரீதியாக தான் பழக்கம் என்று எனது புகார் மனுவிலும் ,முதல் விசாரணையிலும்குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . பொதுவாக யாருக்காவது கடன் பணம் கொடுத்தேன் என்றால் எழுத்துபூர்வமான ஆவணம் ஏதேனும் பெற்றுக்கொள்ளும் வழக்கம் உண்டா என்றால் உண்டு காசோலை மட்டும் பெற்றுக்கொள்ளுவேன். பு.சா.ஆ. 3 அறிவிப்பில் எதிரியிடமிருந்து கடன்கொடுத்த தேதியன்று காசோலை மட்டும் தான்பெற்றுக்கொண்டுள்ளதாக உள்ளது. பு.சா.ஆ.3 ல்எதிரி என்னிடன் கடன் வாங்கிய தேதியானது 2021 என திருத்தம்செய்யப்பட்டுளளது என்றால் அதுகுறித்து எனக்குதெரியாது. பு.சா.ஆ.3 ல்எதிரி என்னிடம் கடன் பெற்ற தேதியன்றே அவரிடமிருந்து காசோலையினை பெற்றுக்கொண்டேன் என்று குறிப்பிடவிலலை என்றால்அதுப்பற்றி எனக்கு தெரியாது. பு.சா.ஆ 3 ல் 19.06.2021 என்றுதேதியிடப்பட்டு 19.06.2022 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பு.சா.ஆ.3 லுள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் திருத்தம் செய்யப்பட்டது மட்டும்எனக்கு தெரியாது.

பு.சா.ஆ.3 ன் அடிப்படையில் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பு.சா.ஆ 3 இவ்வழக்கு தாக்கல் செய்தவற்கான வழக்கு மூலம்

இல்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 26.12.2020 மற்றும் 19.06.2021 ஆகிய தேதிகளில் திருத்தம் எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் நான்கு சக்கர வாகனம் வாங்குவதற்கு நண்பர்களுக்கும் நான்கு சக்கர வாகனம் வாங்குவதற்கும் என்னிடம் வந்தார் தேதி மற்றும்வருடம் நினைவு இல்லை. எதிரிக்கு நான்கு சக்கர வாகனம் வாங்கி விற்கு கொடுத்துள்ளேன். யார்யாரிடம் எந்த வாகனம் வாங்கப்பட்டது குறித்து பதிவேடு உள்ளது. வழக்கு காசோலையினை எதிரி வாகனம் வாங்குவதற்கு கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் ஒரு வாகனம் வாங்கினார். நண்பர்களுக்காக எதிரி 2,3 முறை வாகனம் வாங்கியுள்ளார். அதற்கான கமிசன் தொகையினை நான் எதிரிக்கு கொடுத்துள்ளேன்.

வாகனத்தை எதிரி தனது நண்பர்களுக்காக வாங்கியிருக்கும் பட்சத்தில் அவர் அதில் சாட்சி கையொப்பம் செய்திருப்பார் என்றால் சரிதான். எதிரி வாங்கிய வாகனம் குறித்த ஆவணம் மற்றும் அவரது நண்பர்களுக்காக எதிரி வாங்கிய வாகனத்தின் ஆவணம் என்னிடம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனை தாக்கல் செய்தால் எதிரியின் கையொப்பம் துலங்கும் என்றால் சரிதான். எதிரி என்னிடம் வாகனம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் அவரது நண்பர்களுக்காக வாகனம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் எதிரி ஒரு போதும் வியாபார ரீதியாக பழக்கம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியை எனக்கு 2019 த்திலிருந்து தெரியும். எந்த மாதம் என்று குறிப்பிட்டு தெரியாது. எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேன். அவரது அப்பா யாரென்று எனக்கு தெரியாது. எதிரி வேலைபார்க்கும் கல்லூரிக்கு நான் நேரடியாக சென்றுள்ளேன். அவ்வாறு நான் எதிரி வேலை பார்க்கும் கல்லூரிக்கு சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு காசோலையினை யார் எழுதி கையொப்பம் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரிதான் நிரப்பி கொடுத்தார். எதிரி வியாபார ரீதியாக வழக்குகாசோலையினை கொடுப்பதற்குமுன்னர் ஆவணங்களில்

கையொப்பம் செய்தததது குறித்து எனக்கு தெரியும் .எதிரியின் கையொப்பம் எனக்கு தெரியும். வழக்குகாசோலையிலுள்ள கையொப்பமும் மற்ற ஆவணங்களிலு்ளள எதிரியின் கையொப்பத்தினையும் ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் இல்லை. பு.சா.ஆ.1 காசோலையை எதிரி எழுதவில்லை கையொப்பம் செய்யவில்லை என்றாலும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

பு.சா.ஆ 2 ல் காசோலை எண் 24 என்று உள்ளது என்றால் சரிதான். எனது புகாரில் வழக்கறிஞர் அறிவிப்பில் , முதல் விசாரணையில் காசோலை எண் 24 என்று குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. என் புகார்மனுவில் வழக்கறிஞர்அறிவிப்பில் முதல் விசாரணையில் காசோலை எண் 527502 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குகாசோலைக்கும் பு.சா.ஆ.2 லுள்ள காசோலைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் எதிரிக்கும் எவ்வித வியாபார தொடர்பு இல்லை என்றாலும் எதிரி எனக்கு கொடுக்கவேண்டிய கடன் தொகை எதுவும் இல்லை என்றாலும் வழக்குகாசோலைக்கு சட்டப்படி கடப்பாடு இல்லை என்றாலும் எதிரி தவறவிட்ட காசோலையினை மோசடியாக பயன்படுத்தி இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரியிடம் அவர் பெற்ற கடன் தொகையினை நான் திருப்பிகேட்டதாக அதற்கு அவர் நாள் கடத்தி வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 26.12.2020 தேதியன்றோ, 26.12.2021 தேதியன்றோ எதிரி என்னிடம் ரூ.5,00,000/- கடன்தொகை பெறவில்லை என்றாலும் 19.06.2021 அன்றோ 19.06.2022 அன்றோ எதிரியிடம் நான் கடன் தொகையினை திருப்பி கேட்கவில்லை என்றாலும், அதற்கு 22.06.2022 அன்று எதிரி வழக்கு

காசோலையினை கொடுத்ததாக கூறியுள்ளது பொய்யானது என்றாலும் எதிரியை யாரென்று  தெரியாது என்றாலும்  சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை:</u>**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.A. Mohammed Sadiq Hussain.,
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti